இந்த அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து, விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கும், உரிய ஆவணங்களைப் பிழையின்றிச் சமர்ப்பிப்பதற்கும் முடியுமாயின், அநாவசிய தாமதங்களைத் தவிர்க்க முடியும் என்பதைத் தயவுடன் கவனத்திற் கொள்க.

**2012 இன் 02 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட, 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்திற்கமைவாக வீடமைப்பு மற்றும் வைத்திய தேவைக்காக ஊழியர் சேமலாப நிதியிலிருந்து 30% நன்மைகளை மீளப்பெறல்**

# அறிவுறுத்தல்கள்

ஊழியர் சேமலாப நிதியின் ஒவ்வொரு அங்கத்தவர் தொடர்பிலும் வீடமைப்பு மற்றும் வைத்திய தேவை கருதி அவரது தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ள தொகையில் நூற்றுக்கு முப்பது (30%) சதவீதத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை உள்ளது. இவ்வாறு மீளப்பெற்றுக்கொள்ளத்தக்க ஆகக்கூடிய தொகை ரூபா இரண்டு மில்லியன் (ரூ. 2,000,000/-) ஆகும்.

டமைப்பு மற்றும் வைத்திய தேவை கருதி பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அங்கத்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்:

- i. பத்து வருடங்களுக்குக் குறையாத காலத்திற்கு அங்கத்துவப் பணத்தைச் செலுத்தியிருப்பவர்
- ii. தற்போதும் சேவையில் இணைந்திருப்பவர்.
- iii. அங்கத்தவரது தனிப்பட்ட கணக்கில் அவரது பெயரில் ரூபா மூன்று இலட்சங்களுக்குக் குறையாத தொகை இருத்தல் (அதாவது, அந்த நன்மையைக் கோரும்போது இலங்கை மத்திய வங்கியால் கணக்காய்வு செய்யப்பட்ட அங்கத்தவரது கணக்கின் மீதி ரூபா மூன்று இலட்சங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்).

ஒரு தடவை 30% நன்மையைப் பெற்றுக்கொண்ட அங்கத்தவரொருவர் அவ்வாறு பெற்ற திகதியிலிருந்து 10 வருடங்கள் முடிவடைந்த பின்னர் இரண்டாவது தடவையாக 30% நன்மையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

"வீடு" தொடர்பில், 30% நன்மைகளை மீளப்பெறும் சந்தர்ப்பங்கள்.

- i. அவருக்குச் செந்தமான இடத்தில் வீடொன்றைக் கட்டுதல்;
- ii. வீடொன்றைக் கட்டுவதற்கு இடமொன்றைக் கொள்வனவு செய்தல்;
- iii. வீடொன்றைக் கொள்வனவு செய்தல்;
- iv. வீடமைப்புக்கான ஆதனமொன்றைக் கொள்வனவு செய்ததால் ஏற்பட்ட ஈட்டை அடைத்தல்; அல்லது,
- v. அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்ற வீட்டுக்கடனில் மிகுதியைச் செலுத்தி முடித்தல்.

"மருத்துவ சிகிச்சைகள்" தொடர்பில் 30% நன்மைகளை மீளப்பெறும் சந்தர்ப்பங்கள்.

- i. பைபாஸ் அல்லாத இருதய சத்திரசிகிச்சை;
- ii. பைபாஸ் சத்திரசிகிச்சை;
- iii. சத்திரசிகிச்சை உள்ளிட்ட புற்றுநோய் தொடர்பான சிகிச்சை;
- iv. சிறுநீரக மாற்று அல்லது மது தொடர்பான சத்திரசிகிச்சை;
- v. சிசேரியன் சத்திரசிகிச்சை; அல்லது,
- vi. விபத்தில் அகப்பட்டு அதன் காரணமாகப் பதினான்கு நாட்களுக்கும் அதிகமான காலத்திற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருத்தல்.

**கவனிக்க வேண்டியது:**

- மருத்துவ சிகிச்சைகள் தொடர்பில், அறிவுறுத்தல்களில் தரப்பட்டிருக்கும் நன்மைகளைப் பெறுவதற்கான 06 காரணங்களுக்கு மேலதிகமான வேறு காரணமெதற்கும் நன்மைகளைக் கோர முடியாது.

**01. வீடமைப்பு**

(அ) வீடொன்றைக் கட்டுதல் / வீடொன்றைக் கொள்வனவு செய்தல்

| | வீடொன்றைக் கட்டுதல் | |
|---|---|---|
| 01 | அங்கத்தவரது பெயரிலுள்ள இடமாயின், அதன் உறுதியின் மூலப் பிரதியும் புகைப்படப் பிரதியும் | |
| 02 | உரிய பிரதேச சபையினால் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட வீடமைப்பு வரைபடத்தின் மூலப் பிரதியும் புகைப்படப் பிரதியும் | |
| | உள்ளூராட்சி அதிகாரசபையால் அனுமதிக்கப்படத் தேவையற்ற பிரதேசமெனின், வீடமைப்பு வரைபடமானது ஆகக்குறைந்தது பட்டயப் பொறியியலாளரால் அல்லது பட்டயப் படவரைஞரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும். | |
| 03 | இடத்தின் உரித்தை நிரூபிப்பதற்காக பிரசித்த நொத்தாரிசின் சான்றிதழ் (இந்தப் படிவம் நன்மைகளைக் கோரும் விண்ணப்பத்துடன் சேர்ந்து உள்ளது). | |

| | இடமொன்றை / வீடொன்றைக் கொள்வனவு செய்தல் | |
|---|---|---|
| 01 | இடத்தை விற்பவரது உறுதியின், பிரசித்த நொத்தாரிசினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி | |
| 02 | நன்மைகளைக் கோரும் விண்ணப்ப திகதிக்கு நேர் முந்திய 06 மாத காலத்தினுள் தயாரிக்கப்பட்டதும், வாங்கும் இடத்திற்குரியதுமான உரித்து அறிக்கை (Title Report) | |
| 03 | ஆகக்குறைந்தது 10 வருடங்களுக்கான "தோம்பு" அல்லது வரலாற்றுத் தாள் (Pedegree) அல்லது இருமடித்தாள் (folio) இன் மூலப் பிரதியும் புகைப்படப் பிரதியும் | |
| 04 | இடத்தை / வீட்டை விற்பதற்கு அவ்வாறு விற்பவரால் சம்மதம் தெரிவிக்கும் கடிதம் (இதன் மாதிரி நன்மைகளைக் கோரும் விண்ணப்பத்துடன் சேர்ந்து உள்ளது). | |
| | வீட்டை வாங்குவதாயின், அவ்வீட்டுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் மூலப் பிரதியும் புகைப்படப் பிரதியும் | |
| 05 | வாங்கப்போகும் இடம் ஒருவரது சீவிய உரித்தின் கீழ் உள்ளதாயின், அதனைக் கைவிடுவதாக சட்டத்தரணியொருவர் முன்னிலையில் சீவிய உரித்தைக் கொண்டிருப்பவரால் செய்யப்படும் பிரகடனம் அல்லது சீவிய உரித்தைக் கொண்டிருந்தவர் மரணமடைந்திருந்தால் அவரது மரணச் சான்றிதழின் சான்றுப்படுத்திய பிரதி. | |

**கவனிக்க வேண்டியது:**

- வீட்டைக் கட்டுவதற்கான நன்மைகளைக் கோரி விண்ணப்பிக்கும்போது, ஒரு நீண்ட கால அனுமதிப் பத்திரமே செல்லுபடியாகும் என்பதுடன், வருடந்தோறும் நீடிக்கவேண்டிய அனுமதிப் பத்திரத்திற்காக ஊ.சே.நி. நன்மைகளைப் பெற முடியாது.
- கொள்வனவு செய்யும் இடம் அல்லது வீடு, அது அமைந்திருக்கும் உள்ளூராட்சி அதிகார சபையினூடாக சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், அனுமதிக்கப்படாத ஆகக்குறைந்த விஸ்தீரணத்தை அல்லது அதற்குக் கூடிய விஸ்தீரணத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- இடத்தைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக, "பிம் சவிய"வின் கீழ் பெறப்பட்ட உரித்துச் சான்றிதழைச் சமர்ப்பிக்கும்போது "தோம்பு" அல்லது வரலாற்றுத் தாள் (Pedegree) அல்லது இருமடித்தாள் (folio) அவசியமில்லை.

(ஆ) வீடமைப்பிற்கான ஆதனமொன்றைக் கொள்வனவு செய்ததால் ஏற்பட்ட ஈட்டை அடைத்தல்

i. வங்கி முகாமையாளரால் சான்றுப்படுத்தப்பட்ட ஈட்டு உறுதியின் பிரதி. ☐

ii. பின்வரும் விடயங்களைக் கொண்டதும் வங்கி முகாமையாளரால் சான்றுப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டதுமான கடிதம்
   - ஈட்டின் பெறுமதி ☐
   - செலுத்தப்பட வேண்டியுள்ள மிகுதிப்பணம் ☐
   - ஈட்டு உறுதியின் இலக்கம் ☐

(இ) அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்ற வீட்டுக்கடனில் மிகுதியைச் செலுத்தி முடித்தல்.

அங்கத்தவரால் பெறப்பட்டிருக்கும் வீட்டுக்கடன் பற்றிய பின்வரும் விடயங்களைக் கொண்டதும், வங்கி முகாமையாளரால் சான்றுப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டதுமான கடிதம்.

- கடன் பெற்றவரது பெயர்
- பெற்றுக்கொண்டது வீட்டுக்கடன் சம்பந்தப்பட்டதுதானா என்பது.
- பெற்றுக்கொண்ட கடனின் தொகை
- விண்ணப்பிக்கும் திகதியன்று கடன் மீதி

**கவனிக்க வேண்டியது:**

இங்கு அங்கத்தவரால் பெறப்பட்ட கடன் தொகையின் மீதியைச் செலுத்திய பின்னர், நன்மைகளில் மிகுதி இருக்குமாயின், வீடு தொடர்பான வேறு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அந்த மிகுதித் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**02. மருத்துவ சிகிச்சைகள்**

1) மருத்துவ சிகிச்சைகள் தொடர்பாக நன்மைகளுக்கு விண்ணப்பிக்கும் அங்கத்தவரால் நிரப்பப்பட்டுச் சமர்ப்பிக்கப்படும் மருத்துவரது சான்றிதழில் (இந்தப் படிவம் நன்மைகளைக் கோரும் விண்ணபத்துடன் சேர்ந்து உள்ளது),

- முதலாவது பகுதி - நோயுற்றவரைப் பரிசோதித்த மருத்துவராலும்
- இரண்டாவது பகுதி -
    i. அரசாங்க வைத்தியசாலையாயின், மருத்துவ அத்தியட்சகரால் / மருத்துவ உத்தியோகத்தரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால்,
    ii. தனியார் வைத்தியசாலையாயின், அதன் முகாமையாளரால்

சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

2) விண்ணப்பதாரியின் வாழ்க்கைத்துணைக்கு அல்லது பிள்ளைக்கு மருத்துவ சிகிச்சைக்காக நன்மைகளைக் கோரி விண்ணப்பிப்பதாயின்,

    i. விவாகச் சான்றிதழின் மூலப் பிரதியும் புகைப்படப் பிரதியும்
    ii. பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியும் புகைப்படப் பிரதியும்

சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**கவனிக்க வேண்டியது:**

நிதியத்தின் அங்கத்தவர், அவரது வாழக்கைத் துணைவர் அல்லது பிள்ளைகள் தொடர்பாக சிகிச்சை பெறும்போது அவ்வாறு சிகிச்சை பெற்ற தினத்திலிருந்து 90 நாட்களுள் இதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

<u>நன்மைகளுக்கான விண்ணபத்தைப் பூர்த்திசெய்யும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை</u>

1. நன்மைக்கான விண்ணப்பம் பிழையின்றியும் தெளிவாகவும் நிரப்பப்பட வேண்டும் என்பதுடன், விண்ணப்பத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படும் இடங்களில் உரிய கையொப்பங்கள், உத்தியோகபூர்வ இலச்சினைகள் மற்றும் திகதி இடப்படுதலும் வேண்டும்:
    - வங்கிக் கணக்கு பற்றிய விபரங்களின் இறுதியில் அங்கத்தவரது கையொப்பமும் திகதியும்.
    - பெயரைச் சான்றுப்படுத்தும் இடத்தின் இறுதியில் தொழில் கொள்பவரது கையொப்பமும் உத்தியோகபூர்வ இலச்சினையும்.
    - அங்கத்தவரது பெருவிரல் அடையாளத்தைச் சான்றுப்படுத்துவதற்காக தொழில்கொள்பவரது கையொப்பமும் உத்தியோகபூர்வ இலச்சினையும்
    - விண்ணப்பத்தின் 8 ஆம் பகுதியின் இறுதியில் தொழில் கொள்பவரது கையொப்பமும் உத்தியோகபூர்வ இலச்சினையும், திகதியும்

2. நன்மை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் கையளிக்கப்படுவதற்கு மூன்று மாதங்களின் முன்னர் அந்த நிறுவனத்தில் விண்ணப்பதாரி சேவையிலுள்ளார் என்ற சேவைக் கடிதமும் தொழில்கொள்பவரால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் சேர்த்துக் கையளிக்கப்பட வேண்டும். ☐

**ஊ.சே.நி. அங்கத்துவத்தை நிரூபிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

1. தற்போதைய அங்கத்துவ இலக்கத்துடனான "பீ" அட்டையின், தொழில்கொள்பவரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி.

2. முன்னர் வேறு நிறுவனத்தில் தொழிலில் இருந்திருந்தால், அதற்கான அங்கத்துவத்தை நிரூபிக்கும் "பீ" அட்டை (முன்னர் தொழிலில் இருந்த நிறுவனம் மூடப்பட்டு அதன் "பீ" அட்டை இல்லாதிருந்தால், அவ்வாறு முன்னர் தொழிலிலிருந்த ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைக் கடிதம் அல்லது நியமனக் கடிதம் அல்லது சம்பள விபரம் போன்ற ஏதாவதொரு ஆவணம் மூலம் அது நிரூபிக்கப்படலாம்).

3. தேசிய அடையாள அட்டையும் அதன் பிரதியும் (சேதமடைந்த அல்லது தெளிவற்ற அடையாள அட்டை ஏற்கப்பட மாட்டாது). ☐

4. நன்மைக்கான பணத்தை அனுப்ப வேண்டிய வங்கிக் கணக்கின் இலக்கமும், வங்கியின் பெயரும், வங்கிக் கிளையின் பெயரும் அடங்கிய வங்கிக் கணக்குப் புத்தகமும் அதன் விபரங்கள் அடங்கிய பக்கத்தின் பிரதியும்; அல்லது நடைமுறைக் கணக்காயின் சமீபத்தில் பெற்றுக்கொண்ட கணக்கின் அறிக்கை (வீட்டுக்கடனை அடைப்பதற்காக நன்மையைக் கோருவதாயின், அக்கடனை வழங்கிய வங்கியில் அங்கத்தவருக்கு உள்ள கணக்கின் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்). ☐

5. ஊ.சே.நிதியைப் பிணையாக வைத்து ஏற்கனவே வேறு வீடமைப்புக் கடனைப் பெற்றிருந்தால், அல்லது அவ்வாறான கடனுக்கு விண்ணப்பித்து அதனை இன்னும் பெறாமலிருந்தால்,

   i. அவ்வாறான கடனை இன்னும் முழுமையாகச் செலுத்தி முடிக்காமலிருந்தால், S படிவத்துடன் சேர்த்துப் பெறப்படும் விண்ணப்பப் படிவத்தின் A பகுதியிலுள்ள I பிரிவு, அக்கடனை வழங்கிய வங்கியினால் பூர்த்திசெய்யப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ☐

   ii. அவ்வாறான கடன் முழுமையாகச் செலுத்தி முடிக்கப்பட்டிருந்தும், அதன் இலக்கம் நீக்கப்படாதிருந்தால், S படிவத்துடன் சேர்த்துப் பெறப்படும் வீடமைப்புக் கடன் படிவம் 14 ஆனது, உரிய தொழில் அலுவலகத்தாலும், வங்கியாலும் சான்றுப்படுத்தப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ☐

   iii. அவ்வாறான கடனுக்கு விண்ணப்பித்து, இன்னும் பெறாமலிருந்தால், உரிய தொழில் அலுவலகத்தினூடாக ஊ.சே.நிதிக் கடனுக்குரிய கணக்கு நாளதுவரைப்படுத்தப்பட்டு (updated) நன்மைக்கான விண்ணப்பத்துடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ☐

**கவனிக்க வேண்டியது:**

ஊ.சே.நிதியைப் பிணையாக வைத்து கடன் பெறப்பட்டிருந்தால், அந்தக் கடன் தொகை முதலில் செலுத்தப்பட்ட பின்னர், நன்மைகளில் மீதித் தொகை காணப்பட்டால், வேறு சொத்தை அல்லது வீட்டை வாங்குவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுவதனூடாக அந்த மீதித் தொகையையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**பொதுவான அறிவுறுத்தல்கள்**

01. நன்மைகளுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் அங்கத்துவ இலக்கத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியால் குறிப்பிடப்படும் உங்களது பெயர், தே.அ. அட்டையிலுள்ள உங்களது பெயருடன் வித்தியாசப்படுமாயின், அதற்குரிய தொழில்கொள்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் கடிதம், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், சரியான "பீ" அட்டை அல்லது அதன் சான்றுப்படுத்திய பிரதி ஆகியவற்றைப் பயன்படுத்தி பெயரைத் திருத்தியமைத்துக் கொள்க.

நிறுவனம் / நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டால், அதற்குரிய அங்கத்துவ இலக்கம் தொடர்பில் நட்டஈட்டுப் படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்.

02. உங்களால் இதுவரை ஊ.சே.நிதியைப் பிணையாக வைத்து வீடமைப்புக் கடன் பெறப்பட்டிருந்தால், மருத்துவ சிகிச்சைகள் தொடர்பாக 30% நன்மைகளுக்கு விண்ணப்பிக்க முடியாதென்பதைக் கவனத்திற் கொள்க.

03. உங்களது விரலடையாளங்கள் மற்றும் தே.அ.அட்டை இலக்கம் ஆகியன இலத்திரனியல் முறையில் பதிவுசெய்யப்பட்டிருந்தால் மாத்திரமே, நீங்கள் 30% நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு இதுவரை பதிவுசெய்யப்பட்டிருக்காவிடில், அவற்றைப் பதிவுசெய்யும் விண்ணபத்தில் விரலடையாளங்கள் தொழில்கொள்பவரால் சான்றுப்படுத்தப்பட்டு, நன்மைகளைப் பெறுவதற்குரிய விண்ணப்பத்துடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் (இதற்கான படிவத்தை நன்மைகளைக் கோரும் விண்ணப்பத்துடன் சேர்த்துப் பெற்றுக்கொள்ள முடியும்).

04. இவ்வாறு நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் அருகிலுள்ள தொழில் அலுவலகத்திற்குச் சென்று உரிய அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்க.

05. பிழையின்றிப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் உரிய ஆவணங்களுடன் சேர்த்து, கொழும்பு 5, நாராஹேன்பிட்ட, தொழில் செயலகத்தின் 5 ஆம் மாடியிலுள்ள ஊ.சே.நி. 30% நன்மைகள் தொடர்பான அலுவலகத்தில் (தொ.பே. இலக்கம்: 011-2501249, 011-2368251, 011-2368252) அல்லது அருகிலுள்ள மாவட்டத் தொழில் அலுவலகத்தில் நீங்கள் நேரடியாக வந்து ஒப்படைத்தல் வேண்டும்.

   i. குருணாகலை மாவட்டத் தொழில் அலுவலகம் (தொ.பே. இல. 037-2223590, 037-2223141)
   ii. வடமத்திய பிராந்திய தொழில் அலுவலகம், அனுராதபுரம் (தொ.பே. இல. 025-2050290, 025-2234537)
   iii. சப்ரகமுவ பிராந்திய தொழில் அலுவலகம், இரத்தினபுரி (தொ.பே. இல. 045-2225755)
   iv. தெற்கு பிராந்திய தொழில் அலுவலகம், காலி (தொ.பே. இல. 091-2244649, 091-2232341)
   v. ஊவா பிராந்திய தொழில் அலுவலகம், பதுளை (தொ.பே. இல. 055-2231510)
   vi. மேற்கு பிராந்திய II தொழில் அலுவலகம், களுத்துறை (தொ.பே. இல. 034-2224854, 034-2229511)
   vii. மத்திய பிராந்திய தொழில் அலுவலகம், கண்டி (தொ.பே. இல. 081-2200422, 081-2204503)
   viii. வடக்கு பிராந்திய தொழில் அலுவலகம், யாழ்ப்பாணம் (தொ.பே. இல. 021-2217703, 021-2226333)
   ix. கிழக்கு பிராந்திய தொழில் அலுவலகம், திருகோணமலை (தொ.பே. இல. 026-2227390, 026-2227395)
   x. மேற்கு பிராந்திய I தொழில் அலுவலகம், கம்பஹா (தொ.பே. இல. 033-2224252, 033-2226862)